**ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்**
**சாதாரணக் கூட்டம்**

**2022–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் நாள் திங்கள் காலை 10.00 மணியளவில் நடைபெற உள்ள சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

*முன்னிலை :- திரு. த. ரவிக்கண்ணன், B.B.A,*
*நகர்மன்றத் தலைவர்*

**பொருள் எண்: 01**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் பகுதியில் உள்ள திருப்பாற்கடல் குளத்தினை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-22 ன் கீழ் புணரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் மேற்கண்ட குளத்திற்கு நீர் வந்தடைவதற்கு குழாய்கள் பதிக்கும் பணியினை ரூ.4.15/ லட்சம் மதிப்பீட்டில் 15th CFC Tied Grant என்ற தலைப்பின் கீழ் பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் Roc.No.31116/2021/CFC, Dated: 05.09.2022 ம் தேதிய கடிதத்தில் அனுமதியளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அனுமதி கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**(ந.க.எண்:- 6996/2022/E1)**

**பொருள் எண்: 02**

இயக்குநர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் **ந.க.எண்471/2022/அ2 நாள்23.6.2022** கடிதத்தில் **2022–23** ம் நிதியாண்டுக்குரிய நகராட்சி பங்களிப்பு ரூ.75000/– செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளபடி, தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு பயிற்சி கட்டணம் **ரூ.75,000/–ஐ** செலுத்துவதற்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்
**(ந.க.எண்5335/2021/சி1)**

**பொருள் எண்:03**

இந்நகராட்சி வார்டு எண் 19, கீழப்பட்டித் தெருவில் ஏற்கனவே இருந்து வந்த ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் இல்லாத காரணத்தினால், மேற்கண்ட ஆழ்துளை கிணற்றினை தொடர்ந்து இயக்க முடியாத சூழ்நிலை இருந்து வருகின்றது. இதன் காரணமாக அப்பகுதியில் வாழும் பொது மக்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே மேற்கண்ட தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மினி பவர் பம்ப் அமைக்க வேண்டியது அவசியமாகின்றது.எனவே மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,30,000/ க்கும் ( ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட தொகையினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:- 5817/2022/E1)**

**பொருள் எண்:04**

இந்நகராட்சி அலுவலக தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் கிடைக்கப் பெறும் குடிநீரை அளவீடு செய்யப்படும் கருவிக்கு பயன்படுத்தப்பட்டு வந்த UPS பழுதடைந்து விட்ட காரணத்தினால், கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் கிடைக்கப் பெறும் குடிநீரினை சரியாக அளவிட முடியாமல் இருந்து வருகின்றது. மேலும் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளின் நேரடி ஆய்வின் போது மேற்கண்ட UPS ஐ உடனடியாக மாற்றம் செய்து கிடைக்கப் பெறும் குடிநீரினை அளவீடு செய்து கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டது, எனவே மேற்கண்ட பணிக்கு புதியதாக UPS வாங்குவதற்கும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை **ரூ.28,000/** க்கும் மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு விலைப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:- 5528/2022/E1)**

**பொருள் எண்:05**

தமிழக சட்டசபை அறிவிப்பு எண் 16, ன் கீழ் இந்நகராட்சி உரக்கிடங்கினில் பயோ மைனிங் முறையில் குப்பைகளை அகற்றி மீட்டெடுக்கப்பட்ட இடங்களில் புதியதாக 899 மரங்கள் நட்டு காடுகள் உருவாக்கும் பணியினை ரூ.**2.59/-** லட்சம் மதிப்பீட்டினில் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண் 18277/2022/CFC-1, நாள் 26.08.2022ன் படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.மேற்கண்ட நிர்வாக அனுமதி மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்:- 5376/2022/E1)**

**பொருள் எண்:06**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி குடிநீர் பற்றாக்குறையை சரி செய்யும் பொருட்டு செண்பகத்தோப்பு தண்ணீர் தலைமையிடத்தில் பேயனாற்று படுகையில் கூடுதலாக இரண்டு கிணறுகள் அமைத்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் Roc.No.23492/2022/EA2, Dated: 26.08.2022 ம் தேதிய செயல்முறை ஆணையில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

| Sl. No | Name of the Work | Estimate Amount( Rs. In Lakhs) |
|---|---|---|
| 1 | Construction of open well at Senbabathoppu head works near Petchiyamman Kovil | 31.00 |
| 2 | Construction of open well at Senbabathoppu head works near Well No 7 | 31.00 |
| 3 | Construction of pump house at Shenbagathoppu head works near well No.9 | 3.44 |
| 4 | Construction of pump house at Shenbagathoppu head works near well No.8 | 3.44 |
| | **Total Amount** | **68.88** |

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(ந.க. எண் 5377/2022/இ1)**

**<u>பொருள் எண்:07</u>**

இந்நகர் மடவார்விளாகம் காளையார் குறிச்சித் தெரு ( தன்யா நகர் ) வி.ஆர்.என். ரைஸ்மில் பின்புறம் உள்ள தெருவின் கடைசி பகுதியில் தெரு விளக்குகள் ஏதும் இல்லாமல் இருந்து வருகின்றது.எனவே அப்பகுதியில் இரவு நேரங்களில் பொது மக்கள் நடமாடுவதற்கு மிகவும் சிரமமாக இருந்து வருகின்றது. எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள மின் கம்பம் எண் P/56 ல் புதியதாக LED தெருவிளக்குகள் பொருத்துவதற்கும், அதற்காக மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய செலவினத் தொகைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக்குறிப்பு:-**

1) மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண் :- 5150/2022/இ1)**

**<u>பொருள் எண்:08</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட மஜீத் நகரில் அமைந்துள்ள பணியாளர்கள் குடியிருப்பில் காலியாக உள்ள குடியிருப்பினை தனக்கு ஒதுக்கீடு செய்து தரும்படி நகராட்சி உதவி பொறியாளர் 06-09-2022 ல் கோரியுள்ளதன்படியும், மேற்கண்ட குடியிருப்பு எண் 1 ஐ உதவி பொறியாளர் அவர்களுக்கு தற்காலிகமாக ஒதுக்கீடு செய்து தரும்படி வருவாய் ஆய்வாளரின் 22-09-2022ம் பரிந்துரையின்படியும் மஜித் நகர் பணியாளர்கள் குடியிருப்பு எண் 1 ஐ நகராட்சி உதவி பொறியாளர் திரு.ம.திலீபன் அவர்களுக்கு தற்காலிகமாக ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் .

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண்:(5408/2022/அ2)**

**<u>பொருள் எண்:09</u>**

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட திரு.வி.க மேல் நிலைப்பள்ளியின் மேற்கு பகுதியில் பள்ளி வளாகத்தில் உள்ள கழிப்பறைக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்த புதியதாக ஒரு ஆழ்குழாய் கிணறு அமைத்து மோட்டார் மற்றும் தொட்டி அமைக்க வேண்டியது அவசியமாகின்றது. இப்பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.**2,40,000/-** லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு :-**

1) நகர் மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத் தொகையினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:- 5441/2022/E1)**

**பொருள் எண்:10**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ந.க.எண் 1090/2022/அ1, நாள் 26.08.2022 ம் தேதிய கடிதத்தினில் மண்டல இயக்குநர் அலுவலகத்தில் செயல்படும் UPS க்கு ஆண்டு பராமரிப்பு தொகை ரூ.**12980/-** ஐ Novateur Electrical & Digital Systems Pvt Ltd, என்ற நிறுவனத்திற்கு செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட செலவினத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்கண்ட செலவினத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:- 5344/2022/E1)**

**பொருள் எண்:11**

இந்நகராட்சி வார்டு எண் 3 ல் உள்ள தற்போது புதிய புணரமைக்கப்பட்ட நகர்மன்ற கோட்டைத்தலைவாசல் நடுநிலைப் பள்ளியில் வர்ணம் பூசுதல், டைல்ஸ் பதித்தல், மின் விளக்குகள், மின்விசிறிகள் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகின்றது. மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.**5,00,000/** க்கு மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு :-** மேற்படி பணிக்குரிய செலவினத்தொகையினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம்

**( ந.க.எண்:- 5447/2022/E1)**

**பொருள் எண்:12**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மேட்டுநாயுடு தெரு **T.S.NO:**1116,1117 இடங்களில் குடிநீர் குழாய் இணைப்பிற்கு குழாய் பதிக்க கூடாது எனஆட்சேபனை தெரிவித்து திரு.ரெங்கசாமி என்பவர் முன்சீப் நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் **OSNO:54/2011** ன்படி வழக்கு நடை பெற்று வருகிறது. மேற்படி வழக்கினை இந்நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தவும் வழக்கறிஞர் கட்டணம் மற்றும் செலவு தொகை **ரூ,4000/-**ஐ திரு.சி.அன்னக்கொடி என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** 1) வழக்கறிஞர் கட்டணம் ரூ.4000/- மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவின தொகையினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:1406/2022/இ2)**

**<u>பொருள் எண்:13</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண்32, பைபாஸ் ரோடு திருமதி.கலாவதி குடிநீர் இணைப்பு வழங்க தாமதிப்பதாக கூறி நுகர்வோர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட CCN0.06/2015ன்படி வழக்கு நடைபெற்று வந்தது. மேற்படி வழக்கினை தொடுத்த புகார்தாரர் மேற்கொண்டு வழக்கு நடத்த விருப்பம் இல்லை எனதெரிவித்ததால், மேற்கண்ட வழக்கினை நுகர்வோர் ஆணையம் தள்ளுபடி செய்து 1/7/2022ம் தேதி உத்தரவு பிறப்பித்துள்ளது. மேற்படி வழக்கினை இந்நகராட்சி சார்பில் ஏற்று நடத்திய வகைக்கு வழக்கறிஞர் கட்டணம் மற்றும் செலவு தொகை ரூ.5000/-ஐ திரு. சி.அன்னக்கொடி என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** 1) வழக்கறிஞர் கட்டணம் ரூ.5000/- மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவின தொகையினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:5818/2022/இ2)**

**<u>பொருள் எண்:14</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டிலுள்ள ஈப்பு வாகனம் **TN67 K5862** வாகனத்திற்கு காப்பீடு ( INSURANCE ) 05-10-2022 முதல் **04–10–.2023** வரையிலான காலத்திற்கு காப்பீடு ( INSURANCE ) பெறவேண்டியதுள்ளது . எனவே மேற்படி வாகனத்திற்கான காப்பீட்டுத் தொகை ரூ13,255/-யை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**
1) வாகனகாப்பீட்டு கட்டணம் ரூ.13,255/- மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) வாகன காப்பீட்டு தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளஅனுமதிக்கலாம்.
3) நகர் மன்ற தலைவரின் முன் ஒப்புதல் பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்

**(ந.க.எண்6124/2022/இ2)**

**<u>பொருள் எண்:15</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகன எண்:**TN67K4717-** (ஆட்டோ) வாகனத்தின் வாகன காப்பீட்டு காலம் **11.08.2022-**ல் முடிவடைந்து விட்டது. மேற்படி வாகனத்திற்க்கு **2022–2023–**ம் ஆண்டிற்க்கான வாகன காப்பீட்டு தொகை ரூ.6,142/-ஐ யூனைடட் இந்தியா இன்சுரன்ஸ் கம்பெனி லிமிடெட், ஸ்ரீவில்லிப்புத்துார் நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்படி வாகன காப்பீட்டு தொகை வழங்குவதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்:16</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் ஜே.சி.பி வாகன எண்:**TN67AQ8749** வாகனத்தில் உள்ள பேட்டரி பழுதாகிவிட்டது.மேற்படி வாகனத்திற்கு புதிய பேட்டரி வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.18,700/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து இச்செவினத்தொகையை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**(ந.க.எண்:- 6215/2022/H2)**

**<u>பொருள் எண்:17</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதராப்பிரிவில் இயங்கி வரும் வாகன எண்**:TN67K9704-** ன் பேட்டரி **27.09.2022** காணாமல் போய்விட்டது.மேற்படி வாகனத்திற்கு புதிய பேட்டரி வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.**12,500**/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து இச்செவினத்தொகையை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்:- 3093/2022/H2)**

**<u>பொருள் எண்:18</u>**

இந்நகராட்சி வார்டு எண் 27 கொளூர்பட்டித் தெரு மற்றும் சாத்தூர் சாலையினை இணைக்கும் பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட சிறுபாலமானது மிகவும் பழுதடைந்து கழிவு நீர் செல்ல முடியாமல் தேங்கி வருகின்றது, இதனால் அப்பகுதியில் செல்லக்கூடிய வாகனங்கள் செல்ல இயலாமலும், மேலும் கழிவு நீர்தேங்குவதால் துர்நாற்றம் ஏற்படுவதாலும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே பழைய பாலத்தினை அகற்றி விட்டு புதியதாக சிறுபாலம் அமைத்திடவும், மேல் பகுதியில் பேவர் கற்கள் பதித்திடவும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.**2,50,000/-** லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு :-**
1) நகர் மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத் தொகையினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம். **(ந.க.எண்:- 5445/2022/E1)**

**<u>பொருள் எண்:19</u>**

அருள்மிகு ஆண்டாள் கோவில் ஆடிப்பூரத் திருத்தேரோட்டம் 01.08.2022 ம் தேதி நடைபெற உள்ளதால், தேரோட்டத்திற்கு வருகை தரும் பக்தர்களுக்கு குடிநீர் வசதி செய்து தரும் பொருட்டு ரதவீதிபகுதிகளில் புதிய சின்டெக்ஸ் டேங்க் வைத்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு:-**
1) மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பணியினை குடிநீர் விநியோக நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரிடம் மதிப்பீட்டுத் தொகைக்கு முன் ஒப்புதல் பெறப்பட்டு, விலைப்புள்ளி கோரப்பட்டதையும் குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனத்திற்கு வேலை

உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.
**(ந.க.எண் :- 5302/2022/இ1)**

**<u>பொருள் எண்:20</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் அனைத்துக் கணிணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வரும் நெட்வொர்க் அமைப்பு மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், அவற்றில் உதவியாளர்கள் கணிணியில் UTIS, SCHEME WORKS, TUFIDCO SCHEMES, BIRTH-DEATH, TRADE LICENSE, BUILDING BLAN ஆகியவற்றை சரிவர தொடர்ச்சியாக பதிவேற்றம் செய்ய இயலாததாலும், மேற்படி நெட்வொர்க் வயரிங் முழுவதும் 24 கணிணிகள் மற்றும் பிரிண்டர்கள் ஆகியவற்றிற்கு புதியதாக வயரிங் மற்றும் நெட்வொர்க் கேபிள் அமைப்பதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு:-**

1) மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண் :- 5150/2022/இ1)**

**<u>பொருள் எண்:21</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சுத்திகரிப்பு நிலையம் ரூ.**300** லட்சம் மதிப்பீட்டில் மருத்துவர் காலனியில் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. மேற்படி சுத்திகரிப்பு நிலையம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லை. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் மேற்படி சுத்திகரிப்பு நிலையம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நிரப்பிக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது, அதன்படி பராமரிப்பு பணிக்கு தொழில் நுட்ப பணியாளர் ( Diploma Engineering ) மற்றும் இரண்டு களப் பணியாளர்கள் தேவைப்படுவதால் மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட கூலி விலை விகிதத்தில் ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கும் அதற்கான செலவினத் தொகை ரூ.**7,80,000/**க்கு ( ரூபாய் ஏழுலட்சத்து எண்பதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு:-**

1) மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.**(ந.க.எண் :- 6156/2022/இ1)**

**<u>பொருள் எண்:22</u>**

1) ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நகல் பெருக்கி இயந்திரம் ( Xerox Machine ) இல்லாமல் உள்ளது. எனவே இந்நகராட்சியின் அனைத்து பிரிவுகளின் பயன்பாட்டிற்கும் ஜெராக்ஸ் மிஷின் அவசியம் தேவைப்படுகின்றது. எனவே புதியதாக CANON IR 2625 XEROX MACHINE - 1 No வாங்குவதற்கும்,
2) மேலும், இந்நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் 25 எண்ணம் கணிணிகளுக்கு வைரஸ் ஏதும் தாக்காமல் இருக்கும் பொருட்டு Anti Virus Software ( Quick Heal Internet Security 25 Nos பொருத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

மேற்கண்ட வரிசை எண் 1 மற்றும் 2 ல் உள்ள பணிகளை மேற்கொள்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.**3.00/-** லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு:-**
1) மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம். **(ந.க.எண் :- 5151/2022/இ1)**

**<u>பொருள் எண்: 23</u>**

இந்நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் 45 KVA ஜெனரேட்டருக்குரிய 130w AH பேட்டரி பழுதடைந்து விட்டது. இதன் காரணமாக மின்சாரம் தடை ஏற்படும் நேரங்களில் ஜெனரேட்டரினை இயக்குவதற்கு மிகவும் சிரமமாக இருந்து வருகின்றது. எனவே புதியதாக 130 w AH பேட்டரி வாங்குவதற்கும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.17,000/ க்கும் மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3) அவரச அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு விலைப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்: 5915/2022/E1)**

**<u>பொருள் எண்:24</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்:03. பிளாக் எண்:8. நகரளவு எண்.915/3பி47ல்உள்ள ஆக்கிரமிப்பு தொடர்பான நுகர்வோர் முறையீட்டு வழக்கு எண்:O.S.NO:30/2017,க்கு நகராட்சி சார்பாக இந்நகர் மன்ற வழக்கறிஞர் ஆஜராகி வழக்கை நடத்துவதற்கும், வழக்கிற்கு ஆகும் செலவுத் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இச்செவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்:- 3528/2013/ எப்1)**

**பொருள் எண்:25**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட ‘வடக்கு ரத வீதியில் தனியார் செல்போன் டவர் அமைப்பது தொடர்பான வழக்கு எண்:O.S.NO:420/2017,க்கு நகராட்சி சார்பாக இந்நகர் மன்ற வழக்கறிஞர் ஆஜராகி வழக்கை நடத்துவதற்கும், வழக்கிற்கு ஆகும் செலவுத் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இச்செவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்:- 35/2018/ எப்1)**

**பொருள் எண்:26**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்:01. பிளாக் எண்:16. நகரளவு எண்.1697/1ல் உள்ள ஆக்கிரமிப்பு தொடர்பான வழக்கு எண்: O.S.NO:52/99, மற்றும் A.S.NO:41/2011,க்கு நகராட்சி சார்பாக இந்நகர் மன்ற வழக்கறிஞர் ஆஜராகி வழக்கை நடத்துவதற்கும், வழக்கிற்கு ஆகும் செலவுத் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இச்செவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்:- 2690/2010/ எப்1)**

**பொருள் எண்:27**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்:03. பிளாக் எண்:21 நகரளவு எண்.2871/1, 2871/2, மற்றும் 2902/2 ல் உள்ள ஆக்கிரமிப்பு தொடர்பான வழக்கு எண்:O.S.NO:2/2022, மற்றும் 1A2/2022, O.S.NO:427/2021, மற்றும் 1A2/2021, O.S.NO:437/2021, மற்றும் 1A2/2021 க்கு நகராட்சி சார்பாக இந்நகர் மன்ற வழக்கறிஞர் ஆஜராகி வழக்கை நடத்துவதற்கும், வழக்கிற்கு ஆகும் செலவுத் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இச்செவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்:- 152/2018/ எப்1)**

**பொருள் எண்:28**

அரசாணை (நிலை) எண்92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:24.06.2022ம் தேதிய அரசாணையில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 24-B-24H மற்றும் மாநகராட்சிகள் சட்டம் பிரிவுகளின் படி வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்குவதற்கும் மற்றும் அதன் செயல்பாடுகளுக்கு விதிகள் வெளியிடப்பட்டுள்ளது.மேலும் அரசாணை (நிலை) எண்93, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:24.06.2022ம் தேதிய அரசாணையில் குழு செயலாளர் நியமிப்பது குறித்த ஆணையும் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு அரசாணைகளை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்:5621/2021/எப்1)**

**பொருள் எண் : 29**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி **2022–2023–**ம் ஆண்டிற்கு பணியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் அலுவலக நிமித்தம் காரணமாக வெளியூர் சென்று வருவதற்கு பயணப்படி அந்தந்த மாதங்களுக்கு வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ***ரூ.3,00,000/-*** **க்கு (ரூபாய் மூன்று லட்சம் )** மன்றத்தின் அனுமதிக்கும் இத்தொகையினை நகராட்சியின் பொதுநிதியின் கீழ் செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்: 3699/2015/எப்1)**

**பொருள் எண் : 30**

இந்நகர் பகுதிகளில் உள்ள பகிர்மானக்குழாய் கசிவுகளை 2022-23 ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணி ரூ.12.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகர்மன்ற தீர்மான எண் 46 நாள் 25.05.2022 ன் படி அனுமதி பெறப்பட்டு 28.06.2022 ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. அ. சடையப்பன் என்பவருக்கு, நகர்மன்ற தீர்மான எண் 152 நாள் 25.08.2022 ன் படி ஒப்புதல் பெறப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட ஒப்பந்ததாரர் நகர் பகுதிகளில் உள்ள 33 வார்டுகளையும் ஒரே ஒரு ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்வதால் பகிர்மானக் குழாய் கசிவு பணி சரி செய்வதில் மிகுந்த தாமதம் ஏற்பட்டு வருகின்றது. எனவே நகர் பகுதிகளை இரண்டாகப் பிரிக்கப்பட்டு வார்டு எண் 1 முதல் 17 வரை திரு.சடையப்பன் ஒப்பந்ததாரர் மூலமும் 18 முதல் 33 வரை தனியாக வேறொரு ஒப்பந்ததாரர் மூலமும் ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்கண்ட ரூ.6.00 லட்சத்திற்கான மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:- 2615/1/2022/E1)**

<u>பொருள் எண்: 31</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி , பொதுசுகாதாரப்பிரிவு ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட அருள்மிகு ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் திருக்கோவில் ஆடிப்பூரத் தேரோட்ட திருவிழா கடந்த இரண்டு ஆண்டு காலமாக நடைபெறாமல் இந்த வருடம் 01/08/2022–ம் தேதி நடைபெற உள்ளது . மேற்படி திருவிழாவை காண வரும் பக்தர்களுக்கு பொது சுகாதாரம் தொடர்பாக , கண்ட இடங்களில் குப்பைகள் கொட்டக் கூடாது , பக்கதர்களுக்கு கழிப்பிட வசதி செய்யப்பட்டுள்ளது. நடமாடும் சுகாதார வளாகம் செயல்படுகிறது. பக்தர்களுக்கு மருத்துவ வசதி செய்யப்பட்டுள்ளது. திருவிழாவிற்கு வரும் பொதுமக்கள்மற்றும் பக்தர்கள் மாஸ்க் அணிந்து வர வேண்டும், நகர் பகுதியை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். திருவிழாவிற்கு வரும் பக்தர்களுக்கு சுத்தமான சுகாதாரமான குடிநீர் நகராட்சி சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது போன்ற விழிப்புணர்வுகளை மக்களிடம் ஏற்படுத்தும் வண்ணம் தினகரன்,தினமலர்,தினத்தந்தி நாளிதழில் பிரசுரம் செய்யவும் அதற்கான செலவு தொகைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்:3680/2022/எச்1)**

<u>பொருள் எண்:32</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் திரு.கு.பாலசுப்ரமணியன் என்பவர் 16.5.1991 முதல் தினக்கூலியாக பணியாற்றி அரசாணை எண்125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் துறை நாள்27.5.1999ன்படி 25.5.2001ல் தொகுப்பூதியத்தில் அலுவலக உதவியாளராக பணிமர்த்தப்பட்டு 25.5.2002ல் காலமுறை ஊதியத்தில் பணியாற்றி வயது முதிர்வு காரணமாக 31.5.2021 பணி ஓய்வு பெற்றுள்ளார். தனியருக்கு ஓய்வூதியம் வழங்க கோரி பிரேரணை இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இப்பொருள் தொடர்பாக இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை சென்னை அவர்கள், அரசு செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் துறை அவர்களிடம் தெளிவுரை கேட்டதில் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் பணிநியமனம் தொடர்பாக வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளதால் இவ்வாறான இனங்களில் தெளிவுரை வழங்க இயலாது எனத்தெரிவித்துள்ளதால் தனியரின் பிரேரணை நகராட்சிக்கு திரும்பி அனுப்பி வைப்பதாக தெரிவித்துள்ளார்.திரு.கு..பாலசுப்ரமணியன் அலுவலக உதவியாளர் (ஓய்வு) தனக்கு பழைய ஓய்வூதியத்தில் ஓய்வூதியம் வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை சென்னை அவர்களை முதல் பிரதி வாதியாகவும்,நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களை இரண்டாவது பிரதிவாதியாகவும்,நகராட்சி ஆணையர் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்.சி அவர்களை மூன்றாவது பிரதிவாதியாகவும் சேர்க்கப்பட்டு வழக்கு எண் WP (MD) 18937/2022நாள்10.8.2022ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி ஆணையர் அவர்கள் சார்பாக உயர்நீதிமன்ற நகராட்சி வழக்கறிஞர் திரு.ஸ்ரீனிவாஸ் அவர்கள் வழக்கினை நடத்தவும் வழக்கறிஞர் கட்டணம்ரூ.15000/– ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்4162/2021/சி1)**

**<u>பொருள் எண்:33</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணியாற்றிய திரு.சோ.சுந்தரராசு என்பவர் சொத்துவரி பெயர் மாற்றம் செய்வதற்கு கையூட்டு பெற்றதால் லஞ்ச ஒழிப்பு துறையினரால் 2.4.2009 அன்று கைது செய்யப்பட்டதனடிப்படையில் தனியரை 3.4.2009 முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டது.தனியரின் மீதான வழக்கு நடைபெற்று வந்த நிலையில் வழக்கின் தீர்ப்பு 26.4.2022 அன்று வரப்பெற்றது. மேற்படி தீர்ப்புரையின்படி நகராட்சியில் துறை ரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் **ந.க.எண்16843/2009/வி2 நாள்14.6.2022ல்** தெரிவிக்கப்பட்டு, இவ்வழக்கு தொடர்பாக வரப்பெற்ற தீர்ப்புரைக்கு சட்ட கருத்துரை வழங்க நகராட்சி வழக்கறிஞர் சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளை திருபி.ஸ்ரீனிவாஸ் அவர்களிடம் கோரப்பட்டது. மேற்படி வழக்கின் தீர்ப்புரைக்கு சட்டகருத்துரை வழங்கியமைக்கான கட்டணம் ரூ.3000/—ஐ திரு.பி.ஸ்ரீனிவாஸ் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்:1670/2022/சி1)**

**<u>பொருள் எண்: 34</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி , பொதுசுகாதாரப்பிரிவு — ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட அருள்மிகு ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் திருக்கோவில் ஆடிப்பூரத் தேரோட்ட திருவிழா 24/07/2022 முதல் 01/08/2022—ம் தேதி நடைபெற உள்ளது . கடந்த இரண்டு ஆண்டுகளாக கோவிட்—19 தொற்று நோயினால் ஆடிப்பூரத் தேரோட்ட திருவிழா நடைபெறாமல் இருந்தது. அதனால் இந்த ஆண்டு பக்தர்கள் கூடுதலாக வருகை புரிவார்கள். எனவே தூய்மை பணிமேற்கொள்ள தூய்மை பணியாளர்கள் அதிக அளவில் தேவைப்படுகிறது. அரசு ஆணை எண்—101—ன்படி, இந்நகராட்சிக்கு தேவைப்படும் தூய்மை பணியாளர்கள் பணியிடங்கள் —334 , அனுமதிக்கப்பட்ட பணியிடம் —163, தற்போதைய நிரந்தர தூய்மை பணியாளர்கள்—109,தனியார் நிறுவனம் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தூய்மை பணியாளர்கள்—100, காலியாக உள்ள தூய்மை பணியாளர் பணியிடங்கள்—128 ஆகும். மேலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் வீடு வீடாக சென்று திடக்கழிவுகளை சேகரித்தல், உரக்கிடங்கு பராமரிப்பு , பேருந்து நிலைய சுகாதார பராமரிப்பு பிரதான சாலைகள், கழிவு நீர் கால்வாய்கள் முதலிய பணிகளை தினசரி தொய்வின்றி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தற்பொழுது 24/07/2022 முதல் 01/08/2022 வரை நடைபெற உள்ள ஆடித்தேரோட்ட திருவிழாவில் , பொதுமக்களின் சுகாதார நலன்கருதிஅவ்வப்போது குப்பைகளை உடனுக்குடன் அகற்றவும் மற்றும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் பணிகளை மேற்கொள்ளவும் 50 தூய்மை பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் தனியார் ஒப்பந்தத்தின் மூலம் பணியை மேற்கொள்ள 19/07/2022ம் தேதி மன்றத் தலைவரின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி 24/07/2022 முதல் 04/08/2022 வரை நடந்து முடிந்த ஆடித்தேரோட்ட திருவிழாவினை தொடர்ந்து தூய்மை பணிகளை 32 தூய்மை பணியாளர்கள் மூலம் பணி மேற்கொண்டமைக்கு ஸ்ரீவி.எக்ஸ்னோரா நிறுவனம் சமர்ப்பித்துள்ள தொகை ரூ2,03,700/— (ரூபாய் இரண்டு இலட்சத்து மூன்றாயிரத்து எழுநூறு மட்டும்), ஸ்ரீவி எக்ஸ்னோரா நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**( ந.க.எண்:3680/2022/எச்1)**

**<u>பொருள் எண்: 35</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி – பொது சுகதாராப்பிரிவு ,வடகிழக்கு பருவமழை , டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பணி , கொரோனா முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை பணிகள், தற்காலிக கழிப்பறை, பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பறைகள் மற்றும் பொது கழிப்பறைகள் சுத்தம் செய்வதற்கு 5 டன் பிளீச்சிங் பவுடர் , 10 டன் சுண்ணாம்பு பவுடர் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ 4,00,000/– (நான்கு இலட்சம் மட்டும்) மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்:4824/2022/எச்1)**

**<u>பொருள் எண்:36</u>**

இந்நகராட்சி குடிநீர் விநியோக பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்க்கண்ட மோட்டார்கள் பழுதடைந்து தொடர்ந்து இயக்க முடியாத சூழ்நிலையில் இருந்து வருகின்றன.

1) இந்நகராட்சி அலுவலக வளாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்ற பயன்படும் மோட்டார் எண் 1ல் பொருத்தப்பட்டுள்ள 15 HP Open Well Vertical Type Submersible Motor.
2) கோட்டைப்பட்டியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்ற பயன்படும் மோட்டார் எண் 2 ல் பொருத்தப்பட்டுள்ள 20 HP Open Well Vertical Type Submersible Motor.
3) ஊரணிப்பட்டியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்ற பயன்படும் மோட்டார் எண் 1 ல் பொருத்தப்பட்டுள்ள 20 HP Open Well Vertical Type Submersible Motor.
4) தண்ணீர் தலைமையிட கிணறு எண் 4, மின் இணைப்பு எண் 133 க்கு நீரேற்ற பயன்படுத்தப்பட்டு வரும் 3 HP Open Well Submersible Motor.

மேலும் மேற்கண்ட நான்கு இடங்களில் உள்ள மோட்டார்களும் அடிக்கடி பழுதுகளும் ஏற்பட்டும் தொடர்ந்து இயக்க முடியாத சூழ்நிலையில் இருந்து வருகின்றது. எனவே அவற்றிற்கு பதிலாக 15th CFC- Tied Grand என்ற நிதியின் கீழ் குடிநீர் பணிகள் மேற்கொள்வதற்காக புதியதாக மோட்டார்கள் வாங்கப்பட்டு நகராட்சி இருப்பில் இருந்து வருகின்றது. எனவே வரிசை எண் 1 முதல் 4 வரை உள்ள இடங்களில் பொருத்துவதற்கு ஆகும் மின் உபகரணங்களை வாங்குவதற்கு ஆகும் மொத்த செலவினத் தொகை ரூ.**42,000/** க்கு மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு :-

1) மேற்கண்ட செலவினத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:- 5012/2022/E1)**

**<u>பொருள் எண்: 37</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி – பொது சுகதாராப்பிரிவு, கொரோனா முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை பணிகள், தற்காலிக கழிப்பறை, பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பறைகள் மற்றும் பொது கழிப்பறைகள் சுத்தம் செய்வதற்கும் நான்கு ரத வீதிகள் முழுவதும் சுத்தம் செய்வதற்கும் மற்றும் கலவை உரக்கிடங்கில் செயல்படும் நுண் உரக்குடில் மையங்களில் கழிவுகளை எடை போடுவதற்கு 2 எடை இயந்திரம், 150 லிட்டர் பினாயில், 100 லிட்டர் லெமன் கிராஸ் ஆயில், பாதுகாப்பு உபகரணங்களான 110 எண்ணம் கையுறை வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ5,50,000/– (ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரத்து மட்டும்) மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் 4825/2022/H1**

**<u>பொருள் எண்: 38</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி – பொது சுகதாராப்பிரிவு வாகனம் எண்– TN67AQ8749 TATA JCB-க்கு கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ25,000/– (இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>வேலைகளின் விபரம்</u>:**

1) ஹைட்ராலிக் பம்பு ஹோஸ் புதியது –1 எண்ணம்
2) முன் பக்கம் பக்கெட் ஆயில் சீல் –1செட்
3) முன்பக்கம் இடதுபுறம் ஆக்ஸி ஆயில் சீல்–1 செட்
4) லேடர் பக்கெட் கேண்டில் ராடு புதியது மாற்றுதல்

**அலுவலகக்குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளவும்

**( ந.க.எண்:5289/2022/எச்1)**

<u>**பொருள் எண்: 39**</u>

இந்நகராட்சியில் நடைபெற்று வரும் 10.00 லட்சத்திற்கும் மேலான மதிப்பீடு கொண்ட திட்டப்பணிகளை ஆன்–லைன் டென்டரிங் முறையில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் ஆன் லைன் பதிவேற்றம் செய்வதற்கு இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் 3 உயர் அதிகாரிகளின் பெயர்களின் உள்ள இ–டோக்கன் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றது. இந்நிலையில் இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இந்நகராட்சி மேலாளரின் இ–டோக்கனானது 31.08.2022 ம் தேதியுடன் முடிவடைந்து விட்டதால், மேற்கண்ட இருவருக்கும் புதுப்பித்தல் பணி மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகின்றது. மேலும் திட்டப்பணிகளுக்கு தொடர்ந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு வருவதால், அவசர அவசியம் கருதி இ–டோக்கன் பெறும் பணியினை BHARGHAVAN CONSULTANCY, Madurai என்ற நிறுவனத்தின் மூலம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட நிறுவனம் இ–டோக்கனுக்கான தொகையினை முன் பணமாக செலுத்த தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், இந்நகராட்சியில் பணிபுரியும் கணிணி உதவி திட்ட அமைப்பாளர் திரு. கருத்தவேல் பாண்டியன், என்பவரது சொந்த பணம் ரூ.6000/- செலவிடப்பட்டு இ–டோக்கன் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை **திரு. கருத்தவேல் பாண்டியன்** என்பவருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

<u>**அலுவலகக்குறிப்பு :-**</u>
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:- 2515/2022/E1)**

<u>**பொருள் எண்: 40**</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி – பொது சுகதாராப்பிரிவு வாகனம் எண்– TN67K0312 வாகனத்திற்கு 25-08-2022ம் தேதியுடன் தகுதிச்சான்று முடிவடைந்துவிட்டதால் மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெறத் தேவையான கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ49,000/– ( நாற்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்) மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>**வேலைகளின் விபரம்:**</u>

1) இன்ஜின் ஆயில் மற்றும் வாகனத்திலுள்ள அனைத்து ஆயில்களும் புதியது மாற்றி ஆயில் பில்டர், டீசல் பில்டர் புதியது மாற்றுதல்.
2) பேட்டரி புதியது மாற்றுதல், வயரிங் வேலைகள் சரி செய்தல்.
3) நான்கு புறமுள்ள வீல் கிரீஸ் பேக்கிங் செய்து ஆயில் சீல் புதியது மாற்றுதல்.
4) நான்கு பக்கமுள்ள பட்டைகட்டு புஷ் புதியது மாற்றுதல்
5) வாகனத்திலுள்ள டிங்கரிங் வேலைகள் சரிசெய்தல்
6) வாகனத்திலுள்ள கலர் பெயிண்ட் புதுப்பித்து தகுதிச் சான்று புதுப்பித்தல்.

<u>**அலுவலகக்குறிப்பு :-**</u>
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளவும்

**( ந.க.எண்:5209/2022/எச்1)**

**<u>பொருள் எண்: 41</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி **33** வார்டு பகுதிகளில் அமைந்துள்ள **23,704** குடியிருப்புகள், **2095** வணிக நிறுவனங்கள், **259** தொழிற்சாலைகள் ஆகியவற்றிலிருந்து **24.12** மெட்ரிக் டன் திடக்கழிவுகள் தினசரி சேகரமாகிறது**.** தினசரி நகராட்சி துப்புரவு பணியாளர்கள் மற்றும் தனியார் ஒப்பந்த பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது**.** இவற்றில் மக்கும் கழிவுகள் – **15.68** மெட்ரிக் டன் மற்றும் மக்காத கழிவுகள் **–8.44** மெட்ரிக் டன் ஆகும்**.** இந்நகாட்சியில் தினசரி சேகரமாகும் **15.68** மெட்ரிக் டன் மக்கும் கழிவுகளை இந்நகராட்சியின் **4** இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நுண் உரக்குடில்கள் மூலம் உரமாக்கப்பட்டு வருகிறது**.**ஆனால் தினசரி சேகரமாகும் **8.44** மெட்ரிக் டன் மக்காத கழிவுகளான பிளாஸ்டிக் கழிவுகள், ரப்பர் கழிவுகள், துணிக் கழிவுகள், கண்ணாடி பாட்டில்கள் உள்ளிட்ட கழிவுகளை கையாள்வது மற்றும் மக்கச் செய்வது பெரும் சவாலாக உள்ளது**.** ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளில் ஒரு முறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறிய கூடிய கேரி பைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்து மறுசுழற்சி செய்வதற்கு திரு**.**வீ**.**மோகன்ராஜ் உறுப்பினர் இந்திய செஞ்சிலுவை சங்கம், அக்சயாமணி பிளாஸ்டிக், கோவில்பட்டி என்பவர் ஆயுத்தமாக இருப்பதாகவும், கடந்த 5 ஆண்டுகளாக பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் தினசரி சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை மேற்படி நிறுவனத்திடம் ஒப்படைக்கும் பட்சத்தில், சுற்றுச்சூழல் மாசுபடா வண்ணம் மறுசுழற்சி செய்யவும், அதற்கான இயந்திரங்களை நிறுவுவதற்கு தேவையான இடத்தை வழங்குவதற்கும் இந்த இயந்திரங்களை இயக்குவதற்கு தேவையான 60 ஹெச்பி அளவிற்கு மின்சார இணைப்பு பெற்று தரவும், மாதாந்திர மின்கட்டணத்தை அவர்கள் செலுத்தி கொள்ள தயாராக இருப்பதாகவும், மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் தடையில்லா சான்று பெற்று தரவும், 5 முதல் 10 ஆண்டுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியை 100 சதவீதம் மாசில்லா நகரமாக உருவாக்குவதற்கு தாங்கள் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 100% பங்களிப்பில் இத்திட்டத்தை செயல்படுத்திட தயாராக இருப்பதாகவும் விண்ணப்பம் அளித்துள்ளார். ஆகவே, இந்நகராட்சியில் 33 வார்டுகளில் தினசரி சேகரமாகும் மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறப்புற மேற்கொள்ளும் பொருட்டு, திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 விதி எண்15(V) ன் படியும், 24.08.2018 அன்று வெளியிடப்பட்டுள்ள அரசிதழ் (எண் 303) படியான திடக்கழிவு மேலாண்மை விதிகள் செயல்படுத்துவதற்கான மாநிலக் கொள்கையின் அடிப்படையிலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.1936/2017/பி3 நாள்:23.01.2019ன் ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தனியார் நிறுவனம் அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மறுசுழற்சி முறையில் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், கடந்த 5 ஆண்டுகளாக பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்து கொண்டிருக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் தனியாருக்கு இந்நகராட்சிக்கு சொந்தமான செங்குளம் அத்திகுளம் ஊராட்சியில் அச்சங்குளம் ரோட்டில் அமைந்துள்ள கலவை உரக்கிடங்கில் இடவசதி ஏற்படுத்தி கொடுக்கவும், உரக்கிடங்கில் அமைந்துள்ள பழைய கட்டிடத்தில் பிளாஸ்டிக் மறுசுழற்சி செய்வதற்கு உரிய இயந்திரங்களை இயக்குவதற்கு தேவையான மின்கட்டணம் போன்ற இப்பணிக்கான மொத்த உத்தேச செலவினம் ரூ.13,77,300/- ஐ நமக்கு நாமே திட்டத்தில் 100 சதவீதம் பங்களிப்புடன் மேற்படி நிறுவனம் எற்றுக்கொண்டுள்ளதாலும், உரிய நிபந்தனைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் பணியில் ஈடுபடுவதற்கு அக்சயமணி பிளாஸ்டிக்ஸ், 934A1, சாத்தூர் மெயின் ரோடு, வேலாயுதபுரம், கோவில்பட்டி 628501 நிறுவனத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்**.10,**

